


விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் ரவிக்குமார் – ஸ்ரீதேவி அவர்களின் இல்ல திருமண விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் ஜி.இரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று (19.08.2024) திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம்,திருச்சி மண்டலத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து நேரடியாக பொதுமக்கள் மற்றும் விமான பயணிகள் பயன்பெறும் வகையில் திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம், ஸ்ரீரங்கம், நம்பர் ஒன் டோல்கேட் வரையிலான, பேருந்து இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப்குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்ட நிர்வாக இயக்குனர் இரா.பொன்முடி, திருச்சிராப்பள்ளி விமான நிலைய இயக்குனர் கோ. கோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் ஆ.முத்துகிருஷ்ணன், துணை மேலாளர் (வணிகம்) புகழேந்திராஜ், உதவி மேலாளர்(தொழில்நுட்பம்) ராஜேந்திரன், அரசு அலுவலர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### தென்காசி குற்றாலம் சாரல் திருவிழாவை முன்னிட்டு

# ஐந்தருவி சுற்றுச் சூழல் பூங்காவில் தோட்டக்கலை திருவிழா மலர் கண்காட்சி!

## மருத்துவர் ராணிஸ்ரீகுமார் எம்.பி. – பழனி நாடார் பங்கேற்பு!

தென்காசி, ஆக. 20 - தென்காசி மாவட்டம் தென்காசி குற்றாலம் சாரல் திருவிழாவை முன்னிட்டு ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் தோட்டக்கலை துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் தோட்டக்கலை திருவிழா மலர்கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ரா.சீனிவாசன் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் குற்றாலம் சாரல் திருவிழாவினை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

தென்காசி மாவட்டம் குற்றாலம் பேரூராட்சி கலைவாணர் அரங்கத்தில் 16.08.2024 முதல் 19.08.2022 வரை ஆகிய 4 நாட்கள் நடைபெறுகிறது. குற்றாலம் சாரல் திருவிழாவின் துவக்க விழா 16.08.2024 வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலை குமார்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ரா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்ததாவது.

தென்றல் தவழும் தென்காசி மாவட்டத்தில் குற்றாலம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் சாரல் விழாவிற்கு வருகை தந்திருக்கும் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும், அனைத்து அரசு அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும்,சுற்றுலா பயணிகளுக்கும் இனிய காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.சாரல் திருவிழா நமது மாவட்டத்தில் ஒரு முக்கிய பெருவிழா. இதில் அனைத்து தரப்பு மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.பல்வேறு கலை நிகழ்ச்சிகளும்,பல்வேறு விளையாட்டு போட்டிகளும் நான்கு நாட்கள் நடைபெற உள்ளது. இதில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.நமது மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அதன் ஒரு பகுதியாக I LOVE COURTALLAM Selfie point அமைக்கப்பட்டுள்ளது.நமது மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை நமது விருந்தினர்கள் போல் மரியாதையுடனும்,அன்புடனும் நடத்த அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். சாரல் விழா நிகழ்ச்சிக்காக அரும்பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும், நன்கொடை வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும்,நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கென்று பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தென்காசி மாவட்டம் குற்றாலம் இயற்கை சூழ்ந்த இடம். இங்கு பழைய குற்றால அருவி, புதிய குற்றால அருவி மற்றும் ஐந்தருவி, புலியருவி, பழத்தோட்ட அருவி என பல்வேறு அருவிகள் நிறைந்து காணப்படுகின்றன. குற்றாலம் இயற்கையாக அமைந்துள்ள அருவி.இங்கு குளிப்பதால் பல்வேறு நோய்கள் தீர்கின்றன.இங்கு வரும் மக்கள் சந்தோசமாகவும்,மன நிம்மதியுடன் குற்றாலச்சாரலினை அனுபவித்து விட்டுச் செல்கின்றனர்.இங்கு குற்றாலச்சாரல் விழா இன்று முதல் நான்கு நாட்கள் நடைபெறுகின்றது. மக்கள் அனைவரும் சாரல் திருவிழாவில் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடனும்,மனநிறைவுடனும் வந்து செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல் நாள் துவக்க விழா நிகழ்ச்சியாக மங்கள இசையுடன், கொழு கொழு குழந்தைகள் போட்டிகளும்,இடைகால் மற்றும் சிந்தாமணி பள்ளி மாணவ, மாணவியர்களின் பல்சுவை நிகழ்ச்சியும், பொள்ளாச்சி கண்ணாடி வெண்புறா குழுவினரின் ஜிக்காட்டம் நிகழ்ச்சி, நெல்லை ஸ்ரீவித்யா நாட்டிய மன்றத்தினரின் பரத நாட்டிய நிகழ்ச்சி, சிவகாசி வெண்மணி குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சி, கலைசுடர் மணி நாமக்கல் வே.பிரவு வழங்கும் கிளாரினட் இசை நிகழ்ச்சி, சன் டிவி புகழ் கவிதா ஜவஹர் அவர்கள் தலைமையிலான மாபெரும் சிந்தனை பட்டிமன்றம்,கேரளா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் விஜய் டிவி விஷ்ணுசரண் கலந்து கொள்ளும் தூத்துக்குடி யாழிசை ஆர்கெஸ்ட்ரா வழங்கும் திரைப்பட மெல்லிசை மற்றும் தென்காசி மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் குடும்ப வன்முறை, குழந்தைத் திருமணம், பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு குறித்த காணொளி காட்சி ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் மாவட்ட திட்ட அலுவலகம் சார்பில் கொழுகொழு குழந்தை போட்டி நடைபெற்றது.62 குழந்தைகள் போட்டியில் பங்கேற்றனர்.இதில் 9 முதல் 12 மாத குழந்தைகளின் எடை,உயரம் ஊட்டச்சத்து நிலை, வளர்ச்சி படிநிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மருத்துவர்.சரவணன் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மேலகரம் மற்றும் மருத்துவர் பாண்டித்துரை நேரடி பரிசோதனையிலும் தேர்வான குழந்தைகளில் முதல் பரிசு ரூபாய் 5,000 இலத்தூரை சேர்ந்த மகேஷ் பிச்சையா தம்பதியினரின மகளான இன்சிகாபானுவும்,2வது பரிசு ரூபாய் 3,000,சாம்பவர் வடகரையைச் சேர்ந்த ராஜாமுத்துச்செல்வி அவர்களின் மகனான காளை ராஜாவிற்கும்,3ம் பரிசு ரூபாய்.2,000சாம்பவர்வடகரையை சேர்ந்த சொரிமுத்து ஜெயகிருஷ்ண லெட்சுமி அவர்களின் மகளானஜெயவிசாகாவிற்கும் வழங்கப்பட்டது.

நிகழ்வில்மாவட்ட வன அலுவலர் இரா.முருகன், மாவட்ட வருவாய் அலுவலர்சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோனி பெர்னாண்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அமிர்தலிங்கம், வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, உதவி இயக்குநர் பேரூராட்சிகள் அ.வில்லியம் ஜேசுதாஸ், உதவி இயக்குநர் (மண்டல கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி)

வ.கோபாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### செஞ்சி ஒன்றியத்தில் 53.21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட

# ஊராட்சி மன்ற கட்டிடங்கள், ரேஷன் கடை!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, ஆக.20- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பொன்பத்தி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 22.65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடம்,கவரை ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் ரூபாய் 7.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலை,தென் புதுப்பட்டு ஊராட்சியில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.56லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர்கள் துரை, பணிமலர், கவிதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் அனுசுயா,அய்யனார் சிவகுமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 53.21லட்சம் மதிப்பீட்டில் பொன்பத்தி ஊராட்சியில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டிடத்தையும் கவரை ஊராட்சியில் கட்டப்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடையும் ,தென் புதுப்பட்டு ஊராட்சியில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீத்தாலட்சுமி, முல்லை ,கூட்டுறவு சார்பதிவாளர்கள் கண்ணன், ராஜகுமாரன். கோணை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் பழனிகுமார்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன், ஒன்றிய அவை தலைவர்கள் வாசு, ஆறுமுகம் ,ஒன்றிய துணை செயலாளர்கள் குமார், மதியழகன்,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சுப்புராம், சம்பத்குமார், குப்புசாமி,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் தனசேகரன்,தென் புதுப்பட்டு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, துணை அமைப்பாளர்கள் செந்தில் , பழனி,ஊராட்சி நிர்வாகிகள் பொன்பத்தி ரங்கநாதன், மணிவண்ணன், சந்திரசேகரன், சரவணன், ராஜ்குமார், அன்பு, கவரை மணிபாலன், வீரப்பன், கருணாநிதி, சுதாகர், ராஜாராம், தென் புதுப்பட்டு ஆல்பர்ட் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில்

# தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகம் திறந்திடுக!

## ஒன்றிய அமைச்சர்களுக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



புதுடெல்லி, ஆக. 20 - பெரம்பூர் அல்லது ஆர்.கே.நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த பாஸ்போர்ட் அலுவலகத்தை அமைக்கும்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராயே எம்.சிந்தியா ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியைச் சேர்ந்த மக்கள் என்னிடம் வழங்கியுள்ள மனுவில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதியில் தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்கும் அலுவலகத்தை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கடந்த சில வருடங்களாக மேல்படிப்பு, வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா செல்வதற்கு என நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தாங்கள் அறிவீர்கள். இதனால் புதிதாக வெளிநாடு செல்ல முயலும் மக்களின் எண்ணிக்கை கூடி வருவதால், பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) கேட்டு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**கடவுச் சீட்டு அலுவலகம் ஒன்று கூட இல்லை!**

வளர்ந்து வரும் கடவுச்சீட்டுக் கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து விரைவில் கடவுச்சீட்டு வழங்க வேண்டும் என்ற கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (பாஸ்போர்ட் சேவா கேந்திரா) இல்லாத இடங்களில் அமைந்துள்ள தலைமை தபால் அலுவலகம் அல்லது தபால் அலுவலகத்துடன் இணைந்து செயல்படும் வகையில், தபால் அலுவலகத்துடன் இணைந்த கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தை அமைக்கும் திட்டம் 2017 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை நாடெங்கும் 429 இடங்களில் இதுபோன்ற அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொகுதிகளில் ஒன்றான எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் ஒரு கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் கூட இல்லை. சென்னையில் அமைந்தகரை, சாலிகிராமம் மற்றும் தாம்பரம் முதலான இடங்களில் மட்டும் தற்போது கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவை மத்திய சென்னை மற்றும் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளாகும். எனது தொகுதியைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு சற்று தொலைவான இடங்களில் அமைந்துள்ள கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்களுக்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே, எனது வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரம்பூர் அல்லது ஆர்.கே. நகர் பகுதிகளில் அமைந்துள்ள தபால் அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகத்தையும் அமைத்து தபால் அலுவலகம் மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் (போஸ்ட் ஆபீஸ் மற்றும் பாஸ்போர்ட் சேவா கேந்திரா) அமைத்துத் தரும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். ஒன்றிய வெளியுறவுத்துறை, தகவல் தொடர்பு துறையும் இணைந்து இத்தகைய தபால் அலுவலகம் பாஸ்போர்ட் சேவா கேந்திரா அலுவலகங்களை அமைக்க வேண்டும் என்பதால் இக்கோரிக்கையை மேற்படி இரு அமைச்சகங்களுக்கும் ஏற்கப்பட்டு விரைந்து ஆவன செய்யப்படும் என்று நம்புகின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதங்களில் கூறியுள்ளார்.



கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மேனாள் மத்திய அமைச்சருமான முரசொலி மாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திரு உருவப் படத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள். உடன் புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆசெந்தில், சுப.சரவணன், மு.க.ராமகிருஷ்ணன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், மகேஸ்வரி சண்முகநாதன், செ.ரமேஷ், க.செல்லையா, விஜயக்குமார், மா.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.8.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்களில் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், குன்னத்தூர் ஏரியில் அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தின் கீழ் நீரேற்று முறையில் நீர் நிரப்பப்படுவதை மலர்தூவி வரவேற்றார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.பிரேமா ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.